# புதிய நம்பிக்கை

'புதிய நம்பிக்கை' என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

முன்னுரை:

மனிதர்கள் வரலாற்றில் வருகிறார்கள்; சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக ஆக்குகிறார்கள். எந்த ஒரு சமூகம் கல்வி இல்லாமல் இருக்கிறதோ அச்சமூகம் அழிவை நோக்கி செல்கிறது என்பதாகும். அத்தகு சமூகத்தில் பிறந்து கல்வி எனும் ஒளிச்சுடரைத் தன் கையில் ஏந்தி ஓராயிரம் விளக்கை ஏற்றிய மேரி ஜேனின் வாழ்க்கையோடு என் கருத்தையும் இங்கு விளக்க உள்ளேன்.

மேரியின் குடும்பம்:

தந்தை சாம். தாய் பாட்ஸி, பாட்டி பல சகோதர சகோதரிகளைக் கொண்ட ஏழ்மையான குடும்பம் மேரியின் குடும்பம். காலை ஐந்து மணி முதல் மாலை வரை உழைக்கும் குடும்பம். அக்குடும்பத்தில் மேரி மட்டும் வித்தியாசமானவள். எதையும் தான் முதலில் செய்ய வேண்டும் என்று எண்ணுபவள்.

மேரியின் வேட்கை:

ஒரு நாள் மேரி, தேய்த்து வைத்த துணிகளை எடுத்துக் கொண்டு சென்ற அம்மாவுடன் பென் வில்ஸனுடைய மாளிகைக்குச் சென்றாள். அங்கு மேசையில் இருந்த புத்தகத்தை ஆர்வமாக எடுத்துப் பார்த்தாள். அதைக் கண்ட வில்ஸலின் மகள், “புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக் கூடாது! உன்னால் படிக்க முடியாது ..!” என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். அச்செயலினால் மேரியின் மனம் உடைந்தது.

புதிய நம்பிக்கை :

பதினொரு வயதான மேரி தனக்குள் படிக்க வேண்டும். என்ற ஆர்வத்தை வளர்த்துக் கொண்டாள். ஒரு நாள் மிஸ் வில்ஸன் வந்து மேரியிடம் உன்னைப் போன்ற குழந்தைகள் படிக்க வேண்டும். அதற்கு நீ சீக்கிரமாக மேயெஸ்வில்லிக்கு வரவேண்டும்" என்றாள். மேரிக்கு புதிய நம்பிக்கை பிறந்தது. ஏனெனில் அந்தத் தலைமுறையில் படிக்கப்போகும் முதல் ஆள் அவள் தான், ஆர்வமும் மகிழ்ச்சியும் அவளை அணைத்துக் கொண்டன.

கல்விச்சுடர்:

மேயெஸ்வில்லிக்குப் போகவும் வரவும் ஐந்து ஐந்து மைல்கல் அவள் நடக்க வேண்டும். அதைப் பற்றிக் கவலை கொள்ளாத மேரி தனது பள்ளியில் புதிதுபுதிதாய் நிறையக் கற்றுக் கொண்டாள். தான் பெற்ற புதிய கல்வியினால் எழுதப் படிக்க கணக்குப் பார்க்க முடிகிறது சில வருடம் கழித்து மேரிக்குப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மதிப்புமிக்க வெள்ளத்தாள் சுருளில், "இந்தப் பட்டம் பெறும் மாணவர் எழுதவும் படிக்கவும் கூடியவர்" என்று எழுதப்பட்டிருந்தது, அந்த டிப்ளோமாவைப் பெறும்போது மேரி மட்டுமல்ல மேயெஸ்வில்லியின் மக்களுக்கும் பெருமகிழ்வு தான்.

மேரியின் கல்விப் பயணம்:

சில நாட்கள் கழித்து, மீண்டும் ஒரு நாள் மிஸ் வில்சன் வந்து, "உனக்கு ஒரு நல்ல செய்தி. மேற்குப் பகுதியில் வாழ்கின்ற ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பினக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பி இருக்கிறாள். அதற்குத் தேர்வு செய்யப்பட்ட நீ மேற்படிப்பிற்காக டவுனுக்குப் போக வேண்டும்." என்றாள். மேரி பெற்ற மகிழ்விற்கு அளவே இல்லை; தன்னுடைய மகிழ்வைப் பிறருடனும் பகிர்ந்து கொண்டாள்.

கல்வியின் சிறப்பு:

மேரியும் அவளது பெற்றோரும் டவுனுக்குப் புறப்பட்ட போது அண்டை வீட்டுக்காரர் ஒருவர் தனது பண்ணை வாகனத்துடன் வந்து அவர்களை டவுனுக்கு அழைத்துச் செல்லத் தயாரானார், அவளின் பெற்றோர் கூட இதை எதிர்பார்க்கவில்லை. அவர்களோடு பலர் இணைந்து கொண்டு மேரியை டவுனுக்கு வழியனுப்ப இரயில் நிலையத்திற்கு வந்தார்கள். அங்கு மிஸ் வில்ஸனும் வந்தார். மேரி புகை வண்டியில் ஏறி டவுனுக்குச் சென்ற போது, கூடி இருந்தவர்களின் வாழ்த்தொலி "கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதை நிரூபித்தது.

முடிவுரை;

எண்ணற்றோர் கல்வி அறிவற்ற இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையை அறிவது கல்வி வரலாற்றை அறிவதாகும். சாதாரணப் பெண்ணாகப் பிறந்து, தனது முயற்சியாலும் பலரது உதவியாலும் வாழ்வில் உயர்ந்து, சமுதாயத்தின் அறியாமை இருளைப் போக்கத் தோன்றிய மேரி ஜேன்னின் வாழ்வியல் நிகழ்வுகளைப் போல, நாமும் அவமானங்களை வெகுமானமாக மாற்ற முயற்சிப்போம்.